# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மனிதநேய சேவைகளுக்கான செந்தாமரை ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2011, மாச்சு மாதம் 25 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## **2011 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மனிதநேய சேவைகளுக்கான செந்தாமரை ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. கூட்டி. 4/2010*

### **மனிதநேய சேவைகளுக்கான செந்தாமரை ஒழுங்கமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

*பயனுறுதியுள்ள ஒருங்கிணைப்பு, ஒன்றிப்பு மற்றும் வலையமைப்பு என்பவற்றினூடான அன்பு, பாசம், கருணை, மெச்சுகின்ற மகிழ்ச்சி, சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் மனிதநேய சேவைகளுக்கான வளத்துறை வங்கி ஒன்றாக செயற்படுவதன்மூலமும், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் அதிகபட்ச தயார்நிலையை நிலைநாட்டுவதன் மூலமும் ஏதேனும் இயற்கை அனர்த்தங்களின் நேரத்தில் அனைத்து உயிரினங் களினதும் துயரத்தைத் தடுத்தல், தணித்தல் ஆகிய நோக்கத்திற்கு பௌத்த கோட்பாட்டின்மீது தொழிற்படும் "மனிதநேய சேவை களுக்கான செந்தாமரை ஒழுங்கமைப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்கமைப்பு ஒன்று இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப் படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மனிதநேய சேவைகளுக்கான செந்தாமரை ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*மனிதநேய சேவைகளுக்கான செந்தாமரை ஒழுங்கமைப்பைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மனிதநேய சேவைகளுக்கான செந்தாமரை ஒழுங்கமைப்பின் தற்போது உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப் பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய வர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மனிதநேய சேவைகளுக்கான செந்தாமரை ஒழுங்கமைப்பு" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்க வும்படலாம். அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத் திருக்கவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்து வமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான குறிக்கோள்கள்.*

**3**. (1) கூட்டுத்தாபனத்தின் பொதுவான குறிக்கோள்கள் பயனுறுதியுள்ள கூட்டிணைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் வலைய மைப்பு என்பவற்றினூடாக மனிதநேய சேவைகளுக்கு வளத்துறை வங்கி ஒன்றாக செயலாற்றுவதன்மூலம் உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் அதிகபட்ச தயார்நிலையை நிலைநாட்டு வதன்மூலம் ஏதேனும் இயற்கை அனர்த்தங்களின் நேரத்தில் அனைத்து உயிரினங்களினதும் துயரத்தைத் தடுத்தல், தணித்தல் ஆதல் வேண்டும்.

(2) மேலே (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள குறிக்கோள் களின் பொதுமைக்குப் பங்கமின்றி, குறித்த ஒழுங்கமைப்பின் குறிக்கோள்களும் பணிகளும் குறிப்பாகப் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) மனித துயரத்தைத் தடுக்கும் மற்றும் தணிக்கும் நோக்குடன் உறுப்பினர்களாகவுள்ள கழகங்களின் மனிதநேய செயற்பாடுகளின் எல்லா வடிவத்தையும் ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும் ;

(ஆ) ஒவ்வொரு நாட்டிலும் மனிதநேய சேவைகளுக்கான கழகம் ஒன்றினைத் தாபிப்பதனையும் மற்றும் அபிவிருத்தி செய்வதனையும் ஊக்குவித்தலும் மேம்படுத்துதலும் அத்துடன் அவற்றில் கூட்டுத்தாபனத்தின் கோட்பாடுகளை வேரூன்றச் செய்தலும் ;

(இ) சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் அனர்த்த முன்தயார்நிலைக்கு என நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும் அதற்கு உதவுதலும் ;

(ஈ) நிவாரணம், புனர்வாழ்வளித்தல், புனரமைப்பு வேலை மற்றும் ஆளுமை அபிவிருத்தி என்பவற்றுக்காக வளங்களைத் திரட்டுதலும் அணிதிரட்டுதலும் ;

(உ) அனர்த்த நிர்க்கதியினர் எல்லோருக்கும் பாரபட்சமின்றி கிடைக்கக்கூடிய எல்லா வழிகள்மூலமும் நிவாரணம் வழங்குதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் பொதுவான குறிக்கோள்களுக்கு இணங்கவும் அத்துடன் தேசிய கழகங்கள் மற்றும் ஏதேனும் உறுப்பினர் கழகங்களுடனான ஒத்துழைப்புடனும் நிவாரண செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வழிநடத்தல் ;

(எ) உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் பயனுறுதியுள்ள ஒழுங்கமைப்பின் மற்றும் தகவல் பரப்புகை உட்கட்டமைப்பின் அபிவிருத்தியில் உதவுதல் ;

(ஏ) சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ திறன், முதலுதவி, உயிர்காப்புத்திறன், மனக்காயத்துக்குப் புத்திமதி வழங்கல், பிள்ளை கவனிப்பு முகாமை மற்றும் குறுகிய கால, நீண்டகால புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னேற்றுவது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தலும் அவற்றுக்கு உதவுதலும் அத்துடன் தொடர்ச்சித் தன்மையை உறுதிப்படுத்துதலும் ;

(ஐ) தேசிய மட்டக் கழகங்களின் இணையத்தளங்களுடன் தொடர்புபட்ட ஒரு தரவுத்தளம் மற்றும் ஒரு இணையத்தளத்தை விருத்தி செய்தலும் பராமரித்தலும் ;

(ஒ) செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கம் போன்ற ஒரே மாதிரியான ஒழுங்கமைப்புகளுடன் நெருக்கமான உறவை விருத்தி செய்தல் ;

(ஓ) விசேடமாக இளைஞர்களையும் சிறுவர்களையும் தொடர்புறுத்தி மனிதநேய சேவைகள் தொடர்பான பாரிய விழிப்புணர்வை ஊக்கப்படுத்தல் ;

(ஔ) உறுப்பினர் கழகங்களை ஒத்திசைவு செய்தல் மற்றும் ஒருங்கிணைதல், அவற்றிற்கிடையே அன்னியோன்னிய செயற்பாடுகளையும் நட்புறவையும் ஊக்கப்படுத்துதல் ;

(க) மனித உயிரினங்களின் ஏகத்துவம் வேற்றுமையின் இரண்டாம்பட்ச காரணிகளை விஞ்சிநிற்குமென்ற உண்மை நிலைபற்றி மக்களுக்குப் புகட்டுதல் ;

(ங) மனிதநேய சட்டங்கள் எங்கெல்லாம் தோதானதாகக் காணப்படுகின்றதோ, அங்கெல்லாம் அதனைப் பிரகடனம் செய்வதிலும், அபிவிருத்தி செய்வதிலும் மற்றும் அறிமுகம் செய்வதிலும் அரசாங்கத்திற்கு பிரதிநிதித்துவம் செய்தல் ; அத்துடன்

(ச) நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான சர்வதேச மற்றும் தேசிய அரங்குகளில் உறுப்பினர் கழகங்களின் உத்தியோகபூர்வ ரீதியான பிரதிநிதித்துவத்தைச் செய்தல்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு இச்சட்டத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதில், கூட்டுத்தாபனமானது அத்தகைய நடைமுறைப்படுத்தல் இனம், சாதி, மதம், மொழி அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பவற்றின் அடிப்படையிலான வேறுபாடுகளின்றி நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை மற்றும் நிருவாகம் இச்சட்டத்தினதும் மற்றும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நிறைவேற்றுக் குழுவொன்றினால் நிருவகிக்கப் படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்றவர்களான நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர்கள் நிறைவேற்றுக்குழுவின் முதலாவது உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன், குழுவொன்று 6 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படும் வரை பதவிவகித்தலும் வேண்டும்.

தத்துவங்களும் பணிகளும்.

**5.** (1) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான அல்லது இடைநேர்விளைவான எல்லா விடயங்களையும் செய்வதற்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து காசாக அல்லது வேறுவகையில் கொடைகள், மானியக்கொடைகள், நன்கொடைகள், உதவிப்படிகள் மற்றும் ஒப்பப்பணங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளுதலும் சேகரித்தலும் ;

(ஆ) நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்தல் மற்றும் மூடுதல் அத்துடன் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணத்தைக் கடனாகப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது திரட்டுதல் ;

(இ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்றவாறு அல்லது வேறுவகையான பயனைக்கொண்டு கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அல்லது கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படும் ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை, அத்தகைய ஆதனத்தைப் பற்றிநிற்கும் நம்பிக்கைப் பொறுப்பிற்கு அமைவாக விற்றல், குத்தகைக்கு விடுதல், ஈடுவைத்தல், கொடுத்துமாற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நிதியத்தை அவசியமானதெனக் கருதக்கூடியவாறு போதுமான பிணைப்பொறுப்புக்களில் முதலீடு செய்தல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் ஏதேனும் கட்டடம் அல்லது கட்டமைப்பை நிறுவுதலும் அல்லது நிறுவச் செய்வித்தலும் அத்துடன் செயலகம் ஒன்றைத் தாபித்தலும் ;

(எ) பொதுவாக, கூட்டுத்தாபனத்தின் பணிகளைத் தகுந்தவாறு நிறைவேற்றுவதனை வசதிப்படுத்த அவசியமான மற்றெல்லா விடயங்களையும் செய்தலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும், அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் பணிகளையும் எய்துவதற்கும் என கூட்டுத்தாபனத்தின் ஒரு பொதுக் கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் வாக்குப்பெரும்பான்மை கொண்டு காலத்திற்குக்காலம் விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி அத்தகைய விதிகள் பின்வரும் எல்லாக் கருமங்களும் அல்லது ஏதேனும் கருமம் தொடர்பில் ஏற்பாட்டைச் செய்யலாம் :-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், அவர்கள் விலகுதல் மற்றும் அவர்களை விலக்குதல் ;

(ஆ) பணியாட்டொகுதியினரின், சேவையாளர்களின் மற்றும் வேறு ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, நியமனம் மற்றும் ஒழுக்காற்று அத்துடன் முகவர்களினதும் பிரதிநிதிகளினதும் நியமனம் ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், தத்துவங்கள் மற்றும் பணிகளை எய்துவதற்கு இடைநேர்விளை வானதாக அல்லது உசிதமானதாக இருக்கின்ற அத்தகைய வேறு கருமங்கள்.

(3) விதிகள், கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்டு அதேபோன்ற கூட்டமொன்றில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கொடைகள், விருப்பாவணக்கொடைகள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவழியாக அத்துடன் கூட்டுத்தாபனத்துக்காகவும் அதன் சார்பிலும் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட வேண்டியவையும் கூட்டுத்தாபனத் திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**8**. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் ஒழுங்கமைப்பிற்கு இருந்துள்ளதான எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப் படுதல் வேண்டும் என்பதுடன், அந்நேரத்தில் ஒழுங்கமைப்பிற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் அத்துடன் செலுத்தப்படற் பாலதான உதவுதொகைகளும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத் தப்படுதலும் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**9**. (1) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களினால் ஒவ்வோர் ஆண்டிலும் குறைந்தது ஒரு தடைவையாவது பரிசீலிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக் கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பின ரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவை யினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற் காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்ட வராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்ற தான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் சின்னமும் இலச்சினையும்.*

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் சின்னமானது, தர்மசக்கரத்தின் வட்டத்தில் உள்ள மெத்தா, கருணா, முதிதா, உபேக்கா என்னும் சொற்களடங்கிய தர்மசக்கரம் ஒன்றின் மீதான செந்தாமரை ஆதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை நிறைவேற்றுச்சபையின் அதிகாரத்துடனும் நிறைவேற்றுச்சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையில் தவிரவும் எத்தன்மைத்தான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாகத் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் மீதான பொறுப்பின் எல்லைகள்.*

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்க்கும் நோக்கத்திற்காக எத்தன்மைத்தான ஏதேனும் உதவுதொகையளிப்பதற்குப் பொறுப்புடையவராதலாகாது.

*கூட்டுத்தாபனம் கலைக்கப்படுதல் அல்லது ஒடுக்கப்படுதலின் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கொடுத்துத்தீர்க்கப்பட்ட பின்னர் பணம் உட்பட எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளினால் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட்டுள்ளவையுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*